முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் வராகிமிகி அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

02.11.2018, வெள்ளிக்கிழமை

1. **யோகராசனே அரங்கா போற்றி**
**யோகிகளை வணங்கி மக்கள்**
**யோகநிலை அடைய வேண்டி**
**உயர் ஞானமருளும் தேசிகனே**

2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் ஒளி சூட்சும நூலை
ஆசிபட **விளம்பி துலை திங்கள்**
**அறிவிப்பேன் மூவையோர் திகதி புகர் வாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 16ம் நாள் 02.11.2018, வெள்ளிக்கிழமை)**
**அறிவிப்பேன் மூவையோர் திகதி புகர் வாரம்**

3. வாரமதில் வராகிமிகி யானும்
வழங்கிடுவேன் உலகோர் நலமுற
வாராந்திர வழிபாடு தொடர
வள்ளல் பெருமான் தருமம்

4. தருமம் தனை அரங்க ஞானி
தரணியில் தழைக்கச் செய்ய
கருமம் விலகி அமைதிபட
கலியுகத்தார் வாழ வேண்டுமா

5. வேண்டுமெனில் மக்களெல்லாம்
விரைந்து தரும வழிக்கு வர
தொண்டென ஞான தேசிகன்
தெய்வீக வழிதனை ஏற்று

6. ஏற்றுமே உலகோர் சேவை ஆற்ற
ஏழாம் படை வீட்டுத் தொடர்பை
ஆற்றல்பட மக்கள் கூட்ட
அரங்க ஞானியிடம் அருள் தீட்சை பெற

7. தீட்சை பெற வினைகள் விலகி
தெளிவு திடம் பெறுவதுடன்
தீட்சை வழி ஞான பலமுடன்
தெய்வீக நிலையில் மக்கள் பெருகி

8. பெருகியே எங்கும் எதிலும்
பேரிடரில்லா அமைதி நிலை
வறுமை துன்பமில்லா வாழ்வு
வல்லமைபட ஞானிகள் தயவு

9. தயவு கூடி கலியுகமே
தனிப்பெருஞ் சக்தியாக மாறி
நேயமுள்ள ஞானயுகமாகும்
நிலவுலகே அமைதி வளம் காணும்

10. காணவே முழுமதி காலம்
கட்டாயம் அரங்கமகான்
ஞானவழி பூசைகள் தன்னை ஏற்று
நானிலத்தில் தொடர்ந்து வருக

11. வருகவே ஞானயுகம் ஆகும்
வருகவே ஞானிகள் பலம் கூடி
முருகன் ஆளுமைக்கு வரும்
முழுமையான ஞான ஆட்சி மலரும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் வராகிமிகி அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எண்ணற்ற யோகங்களை செய்து வெற்றி கண்டிட்ட யோகத்தின் அரசனே யோகராசனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே போற்றி போற்றி, யோகங்கள் செய்து வெற்றி கண்ட ஞானயோகியர்களை மக்களெல்லாம் வணங்கி மக்களும் யோகநிலையை அடைந்திட வேண்டியே அவர்களுக்கு உயர் ஞானத்தினை அருளுகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 16ம் நாள் 02.11.2018, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே வராகிமிகி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் வராகிமிகி.

மக்களெல்லாம் கூடி வழிபடுகின்ற வார வழிபாடுகள் தொடர்ந்து நடந்திட வேண்டும். வள்ளல் பெருமான் செய்திட்ட அன்னதான தருமம்தனை அளவிலாது செய்து உலகினில் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரும் தருமத்தினை தழைத்திட செய்திட்டார்.

உலக மக்களே உங்களது கர்மவினைகள் எல்லாம் விலகி அமைதிபட கலியுகத்தினில் வாழ வேண்டுமா? வேண்டுமாயின் மக்களெல்லாம் உடன் விரைந்து தருமத்தின் வழிக்கு வந்துவிடுங்கள். ஞானதேசிகன் ஆறுமுக அரங்கன் கூறும் தெய்வீக ஞானவழிதனை ஏற்று உலக மக்களெல்லாம் சேவைகளைச் செய்திட ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலின் தொடர்பினை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள்.

ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை நாடிச் சென்று ஆங்கே ஆறுமுக அரங்கமகா தேசிகரிடத்து பயபக்தியுடன் பணிந்து வணங்கி தீட்சை உபதேசம் பெற்று வாழ்வினில் கடைப்பிடித்து வர, அவரவரின் வினைகள் எல்லாம் விலகி தெளிவும், திடமும் பெறுவதுடன் தீட்சை மூலமாய் பெற்ற ஆற்றல் பெருகி ஞானபலமுடன் தெய்வீக நிலையை மக்கள் அடைவர். தெய்வீக நிலையுடைய மக்கள் பெருகி உலகினில் எங்கும் எதிலும் பேரிடர்கள் இல்லாத அமைதியான நிலை உருவாகி உலகமெங்கும் வறுமை இல்லாத வாழ்வும் துன்பம் இல்லாத வாழ்வும் வல்லமையுடன் உண்டாகி ஞானிகளின் தயவும் பெருகி இந்த துன்பம்மிக்க கலியுகமே சக்தி பெற்று தனிப்பெருஞ் சக்தி வடிவமாக ஆகி, தயவே வடிவான ஞானயுகமாக முருகப்பெருமான் கருணையால் ஆகிடும்.

இந்த உலகம் ஞானஉலகமாக ஆகிட உலகமெங்கும் அமைதியும் வளமும் பெருகிடும். இவ்விதமே உலகம் விரைந்து ஞானஉலகமாக நல்லுலகமாக ஆகிட உலக நலன் கருதி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் நடத்தும் வல்லமைமிக்க பௌர்ணமி சிறப்பு ஞானியர் வழிபாடுகளில் கலந்து கொண்டு தொடர்ந்து கலந்து ஆசி பெற்று வரவர, அவரவரின் வினைகள் ஒழிந்து ஞானம் பெருகி இவ்வுலகம் ஞானிகள் அருள் பெற்ற ஞானவான்கள் துணையுடன் பிறந்த ஞானயுகமாக ஆகிடும். ஞானிகளின் பலமும் பெருகி இந்த உலகம் ஞானிகளின் ஞானஆட்சிக்கு வரும். இவ்வுலகினில் முருகப்பெருமான் தலைமையில் ஞானஆட்சி உருவாகிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் வராகிமிகி.

–சுபம்–